1975 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இந்தப் பகுதியில் நீண்ட காலமாகப் பாலம் கட்டவேண்டுமென்று இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் கேட்டு வருகிறார்கள். பாலம கட்டுவது மிகவும் அவசியமானதாகத் தெரிகிறது. இதை ஆய்வு செய்வதற்கு அரசாங்கம் உத்திரவிடத் தீர்மானத்திருக்கிறதா? மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அமைச்சரவர்கள் இதுபற்றி விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பாலம் கட்டுவதற்கு ரூ. 4½ லட்சம் செலவாகும் என்று தெரிகிறது. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களை முதலில் நிறைவேற்றியாக வேண்டியிருக்கிறது.

கொமட்டேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*334. வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குளித்தலை வட்டம், வீரியபாளையம ஊராட்சியைச் சேர்ந்த கொமட்டேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) இதுவரை மேற்படி பணி பூர்த்தியடையாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 1968-ம் ஆண்டு மார்ச் திங்களில் இப்பணி தொடங்கப்பட்டது.

(இ) 1971-ம் ஆண்டு மார்ச் திங்களிலேயே பணி முழுவதும் முடிந்துவிட்டது.

(உ) வினுவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பணி முடிந்துவிட்டது என்று பதில் சொன்னார்கள். கடந்த வாரம்கூட அந்த ஊராட்சி மன்றத்தின் தலைவர்

என்னிடம் வந்து பணி முடியவில்லை என்று கூறி உள்ளார். ஆகவே பணி முடிவடையாமல் இருந்தால் இனியாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் கவனம் செலுத்தி இதை முடித்துக்கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு உயர்நிலை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியொன்றை அமைத்திருக்கிறார்கள். ஆனால் கிணற்றில் தண்ணீர் வற்றிவிட்ட காரணத்தினால் மறுபடியும் 6,500 ரூபாய் செலவில் இந்தக் கிணற்றைத் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சீர்பருவச் சாலைகள்.

*335 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிற்றூர்களுக்கு சீர்பருவச் சாலை அமைக்கும் திட்டத்தின்கீழ் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும் எடுத்து நிறைவேற்ற உத்தேசித்துள்ள சாலைகள் எவை, எவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரு விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 21 வேலைகள் எவை, எவை எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று விவரம் தரப்பட்டிருக்கிறது. அண்மையில் பெய்த மழையால் பல சாலைகள் பெயர்ந்து உடைப்பெடுத்து இருக்கிறது. தொடர்புச் சாலைகளை விரைவாக ஏற்படுத்துவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே எடுத்துக்கொண்ட திட்டங்களுக்கே நிதிப் பற்றுக்குறை இருக்கிறது. நிதி நிலைமை சீர்பட்டவுடன் இந்த வேலைகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* 578–580 -ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.